**வாரியபொல பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வாரியபொல பிரதேச சபையின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியாகும்போது எழுதுகருவிகள் தொகையின் பெறுமதி ரூ.914,853 ஆயினும், அது நிதியறிக்கை களில் ரூ.820,163 என காட்டப்பட்டிருந்தது. | உண்மையான பெறுமதி கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கையில் அவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள 04 சனசமூக நிலையங்களும் அவை அமைந்துள்ள இடங்களின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு சரியானமுறையில் ஆவணப்படுத்துவதி னூடாக கணக்கிலிப்படல் வேண்டும். | இச்சன சமூக் நிலையங்கள் மற்றும் அவை அமைந்துள்ள இடங்களும் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் இல்லாமையினால் அவற்றை மதிப்பீடு செய்யவோ நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிடவோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 தெசெம்பர் மாதம் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டம் நிதியறிக்கைகளில் காட்டப்பட்டிருக் கவில்லை. | வருமானங்கள் கணக்கிலிடப்படல் வேண்டும். | இதனை எதிர்வரும் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்குரியதாக கிடைக்கப்பெற்ற ரூ.32,545,383 பெறுமதியான முத்திரை கட்டணம் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக காட்டப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணமாக குறித்த தொகை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்துக்குரிய வருமானங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்கு தயார் செய்கையில் இதற்கான சரியாக்கல் தவறிவிடப்பட்டுள்ளமையால் அடுத்த வருடத்திலிருந்து அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க பார்த்துக்கொள்வேன். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய வேறு வருமானங்கள் ரூ.109,275 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | அடுத்த ஆண்டு கணக்கு தயார் செய்கையில் இவற்றை சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | கடந்த ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூ.51,800 மற்றும் ரூ.46,800 பெறுமதியான மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலெடுக்கப்படவில்லை. | வருடத்துக்குரிய வருமானங்கள் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020.12.31 ஆந் திகதிக்கு இறுதிக் கணக்கு தயார் செய்யும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூ.7,861,335 ஆக இருப்பினும் நிதி அறிக்கைகளில் அது ரூ.8,001,116 எனக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்துக்குரிய வருமானங்கள் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அடுத்த ஆண்டுக்கான கணக்குகளைத் தயார் செய்கையில் இதனை சரி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன். |
| (ஏ) | கூட்டுத்தொகை ரூ.52,264,400 ஆகவிருந்த கணக்கு வகைகள் 05 இற்கான உரிய சான்றுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப் | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற் குத் தேவையான | முன்பள்ளிகள் மற்றும் நூல்நிலையங்களின் பதிவுப்புத்தகங்கள் அந்நிறுவனங்களில் காணப்படுவதுடன், |

| | | |
|---|---|---|
| பட்டிருக்கவில்லை | எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கைத்தொழில் வைப்பீட்டு ஆவணங்கள் மற்றும் கடன்பட்டோர் ஆவணங்கள் சரிசெய்து இற்றைப்படுத்தப்பட்டு ள்ளன. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | பயணம் தொடர்பான ஆரம்ப பொழிப்பு மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்பு ஆகியன உரிய தினத்துக்கு கணக்காய்வாளருக்கு வழங்கப்படவில்லை. | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில வாகனங்களின் மாதாந்த பொழிப்பின் முதற்பிரதி மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களை தங்களுக்கு அனுப்பி வைப்பதாக தெரிவிக்கின்றேன். |

## 1.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருடங்களாக நிதிக் கூற்றுகளில் இருந்துவரும் ரூ.58,218 பெறுமதியான கிராமிய நீர் கருத்திட்டங்களின் கணக்கு முறைப்படியான அனமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | முறைப்படியான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக எவ்வித தகவலையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனமையினாலும், இதனை தொடர்ந்தும் கொண்டு செல்வது அவசியமற்றது என்பதாலும் பதிவேட்டுக் குறிப்பு ஒன்றின் மூலம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,608,022 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,100,312 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 9,841,00 | 9,840,433 | 8,872,119 | 1,567,515 | 5,546,000 | 6,555,877 | 5,956,675 | 599,202 |
| (ii) | வுாடகை | 13,302,045 | 15,389,058 | 13,530,893 | 1,879,630 | 10,360,000 | 11,049,771 | 11,028,306 | 21,465 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,244,000 | 1,040,678 | 1,040,678 | - | 1,247,000 | 1,108,587 | 1,108,587 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 189,536,000 | 169,964,174 | 197,02,412 | 10,576,231 | 182,630,000 | 228,174,734 | 190,360,264 | 37,814,470 |
| | மொத்தம் | 213,923,045 | 196,234,343 | 220,646,102 | 14,023,376 | 199,783,000 | 246,888,969 | 208,453,832 | 38,435,137 |

குறிப்பு

2018 மற்றும் 2019 வருடங்களில் சேகரிக்கப்பட்ட வருமானங்களின் பெறுமதியில் கடந்த வருடங்களுக்குரிய நிலுவை வருமானமும் உள்ளடங்கியிருந்தது. 2019 இல் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 38 மில்லியன் ரூபாய்கள் முன்னைய வருடத்துக்குரிய வருமானமாகும்.

### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதிப்பகுதியில் 49 பொதுச் சந்தை கடைச் சொந்தக்காரர்களிடமிருந்து ரூ.1,217,400 கடை வாடகையும், 31 சிறுவியாபார கடைச் சொந்தக்காரர்களிடமிருந்து ரூ.328,595 கடை வாடகையும் அறவீடு செய்யப்படவேண்டியிருந்தது. | வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடைகளுக்கான வாடகை மதிப்பீடு அதிகரித்தமைக்கு கடைச் சொந்தக்காரர்களின் எதிர்ப்பு காரணமாக அவர்கள் கொடுப்பனவு செய்யாமையினால் ஏற்பட்ட நிலுவையாகும். மேலும் எதிர்ப்பு தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்-

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் கலி வாகனம், தண்ணீர் பௌசர், பெகோ லோடர், வீதி அழுத்தி, டோசர் இயந்திரம் மற்றும் மோட்டார் கிரேடர் இயந்திரம் ஆகியன வாடகைக்கு வழங்கியதன் மூலம் கிடைத்த வருமானம் ஒழுங்குமுறையே ரூ.92,150, ரூ.57,200, ரூ.180,200, ரூ.434,200, 212,500 மற்றும் 146,475 ஆகும். | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வருடத்தினுள் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கிறேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 டிசம்பர் 31 க்கு கிடைக்க வேண்டியிருந்த | வருடத்தின் வருமானம் மற்றும் நிலுவை மீதியை அறவீடு | 2019.12.31ஆம் திகதிக்கு ரூ.516,500 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பண நிலுவையும், |

| | | |
|---|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தின் மீதி முறையே ரூபா 516,500 மற்றும் ரூபா 1,009,605 ஆகும். | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முத்திரைக்கட்டண நிலுவையும் தற்போதாகும் போதும் அறவீடு செய்யப்படவில்லை என்பதுடன், இவை பிரதம செயலாளர் காரியாலயத்தினால் அனுப்பப்படுவதினால் எமக்கு அந்நிலுவையை அறவீடு செய்வது தொடர்பாக எதுவும் செய்வதிற்கில்லை என மேலும் தெரிவித்துக்கொள்கிறேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூ.12,000,000 பாதீட்டைக் கொண்ட 26 கைத்தொழில்கள் முடிக்கப்படவில்லை. | பாதீட்டில் உள்ள கைத்தொழில்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். | எதிர்பார்த் ஒதுக்கீடுகளின் அளவு கிடைக்காமையினா ரூ.12,000,000 பெறுமதியான பாதீட்டைக் கொண்ட 26 கைத்தொழில்களை மீளாய்வாண்டில் முடிப்பதற்கு முடியாதுபோனது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு தெரியப்படுத்தாது 24 பொதுச் சந்தை கடை அறைகளும், சிறு வியாபார கடைத்தொகுதியில் 18 கடை அறைகளும் பேரூந்து தரிப்பு நிலையத்தின் மேல் | ஒப்பந்தங்களை மீறுவோர் விடயத்தில் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை | இது தொடர்பாக கடை சொந்தக்காரர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மாடியில் உள்ள 04 கடை அறைகளும் குத்தகைக் காரர்களினால் மதிப்பீட்டு விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு வேறு நபர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. | எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியாகும்போது கிடைக்கவேண்டியிருந்த ஒரு வருடம் அல்லது அதனை விஞ்சிய கடன்பட்டோர் நிலுவைத் தொகையான ரூ.28,701,116 ஐ அறவீடு செய்வதற்கு முறைப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவீடு செய்தவற்கு தற்போதாகும்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 டிசம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடம் அல்லது அதைவிட கூடிய காலத்தை விஞ்சியுள்ள ரூ.35,012,457 ரூபா பெறுமதியான மீதி தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியாகும்போது வைப்புத் தொகையான ரூ.7,016,296 இல் இருந்து மீள செலுத்த முடியுமான வைப்புகளை கண்டறிந்து அவற்றை செலுத்துவதற்கோ அல்லது வருமானமாகக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வைப்புகளை மீள செலுத்துவதற்கு அல்லது வருமானமாகக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீள செலுத்த முடியுமான வைப்புக்களில் வருமானமாகக் கொள்ளக்கூடிய வைப்புக்களை வருமானமாகக் கொள்வதற்கு தற்போதாகும்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வைப்புக்களை கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அமைய மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### ஆளணி வெற்றிடம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 16 வெற்றிடங்கள் காணப்பட்ட துடன், உள்ளூராட்சி திணைக்களத்தினால் இணைப்பு செய்யப்பட்ட 25 அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள் மற்றும் 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் 04 பதவிகளுக்காக இணைத்துக் கொள்ளபப்பட்ட 26 அதிகாரிகளுடன் ஆளணி மிகை 51 ஆக காணப்பட்டது. | அத்தியாவசியாமான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதுடன் மிகை ஆளனிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குநடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சபையினால் சேர்த்துக்கொள்ள முடியுமான வெற்றிடங்களுக்கு ஆளனியினரை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆளனியினர் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் 2019 பெப்ரவரி 13 ஆம் திகதிய கடிதத்தின் 4 வது பிரிவின் பிரகாரம் சபையின் கடமை நிறைவேற்றல் செயலாளரின் உண்மையான பதவிக்குரித்தான சம்பளமானது முகாமைத்துவ உதவியாளர் சிறப்பு வகுப்பின் ஆரம்ப சம்பள அளவை விஞ்சியுள்ளமையால் கடமை பார்க்கும் கொடுப்பனவுக்கு உரித்து இல்லாவிடினும் 2019 ஜூன் மாதம் தொடக்கம் 2019 திசெம்பர் மாதம் வரை கடமைபார்த்தல் கொடுப்பனவாக ரூ.43,482 செலுத்தப்பட்டிருந்தது. | முறைப்படியான அனுமதியுடன் அல்லது நியமனக்கடிதத்தின் பிரகாரம் கடமை நிறைவேற்றல் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாபனக் கோவையின் பிரகாரம் கடமை நிறைவேற்றல் கொடுப்பனவொன்றை பெற்றுத்தருமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடன் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையால், கடமை நிறைவேற்றல் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

-----------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சந்தையின் முதலாம் மாடி மற்றும் கீழ்மாடியில் உள்ள கடை அறைகளுக்காக 2019 ஜுலை 19 திகதிய மதிப்பீட்டுக்கு தோன்றிய எதிர்ப்பு காரணமாக 2011 வருடத்தின் மதிப்பீட்டு தொகையே அறவீடு செய்தமையால் 2019 தெசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் ரூ.263,850 இழப்பு ஏற்பட்டது. | புதிய மதிப்பீடுகளை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை சொந்தக்காரர்களின் எதிர்ப்பின காரணமாக மதிப்பீட்டுத் தொகையில் 50ூ ஐ அறவீடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டாலும், அதற்கு இணங்காமையினால் மதிப்பீட்டுத் தொகையை 25ூ ஆக குறைத்துத் தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | குத்தகைக்காரரினால் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செயயப்பட்ட நிலையில் 04 வருடங்களாக வாடகை அறவிடப்படாமல் இருந்த வாரியபொல புதிய வியாபார கட்டடத்தொகுதியில் இரண்டாவது மாடியில் உள்ள 04 கடை அறைகளுக்கும் 04 வருடங்கள் விஞ்சிய நிலையிலும் 2019 ஜுலை 04 ஆந்திகதிய மதிப்பீட்டின் பிரகாரம் பணம் அறவீடு செய்யாமையினால் மீளாய்வாண்டில் ரூ.200,000 வருமான இழப்பு ஏற்பட்டது. | புதிய மதிப்பீடுகளை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை சொந்தக்காரர்களின் எதிர்ப்பின் காரணமாக மதிப்பீட்டுப் பெறுமதியில் 50% ஐ அறவீடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டாலும், அதற்கு இணங்காமையினால் மதிப்பீட்டுத் தொகையை 25% ஆக குறைத்துத் தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வாரியபொல சிறிய அளவு வியாபாரத் தொகுதியில் கீழ் மாடியில் 29 கடை அறைகளுக்கும், மேலதிகமான 02 கடை அறைகளுக்கும் 2019 பெப்ரவரி 21ஆந் திகதிய மதிப்பீட்டின் பிரகாரம் கட்டணம் அறவீடு செய்யாமையினால் மீளாய்வாண்டின் இறுதியாகும்போது சபைக்கு ரூ.605,000 வருமான இழப்பு ஏற்பட்டது. | புதிய மதிப்பீடுகளை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை சொந்தக்காரர்களின் எதிர்ப்பின் காரணமாக கடை அறைகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை 50% ஆக குறைக்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டும், அதில் மாற்றமொன்றும் ஏற்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளமையால் மதிப்பீட்டுப் பெறுமதியில் 25% ஆவது குறைப்பதற்கு அனுமதி தருமாறு கேட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 92 மயானபூமிகள் மீளாய்வாண்டில் சபைக்கு கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கையேற்புச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு பிரதேச செயலகங்கள் இரண்டினதும் செயலாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது |

### 3.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வாரியபொல பிரதேச சபையின் முன்னால் செயலாளருக்கு வார சந்தை கொடுப்பனவாக ரூ.2,000 நீண்டகாலமாக செலுத்தப்பட்டதுடன், மீளாய்வாண்டில் இடமாற்றம் பெற்று செல்லும்வரை மே மாதம் வரை வார சந்தைக் கொடுப்பனவாக ரூ.10,000 செலுத்தப்பட்டிருந்தது. | முறைப்படியான ஒப்புதல் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்காக ஒரு வாரத்துக்கு ரூ.500 வீதம் மாதாந்தம் ரூ.2,000 கொடுப்பனவொன்றை மகா சபையின் அனுமதியுடன் முன்னர் இருந்தே செலுத்தப்பட்டுள்ளது. |

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதி விளக்கு உபகணங்களை கொள்வனவு செய்கையில் நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட மிகக்குறைந்தளவு விலைமனுக்களை நிராகரித்தமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வழங்காமையினால் சபைக்கு ரூ.221,440 நட்டம் ஏற்பட்டது. | ஏதேனும் பொருளொன்றை தெரிவுசெய்யும்போது தெரிவுசெய்வதற்கு ஏதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணிகளை தொழில்நுட்பக்குழுவின் தீர்மானத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். | கேட்கப்பட்டுள்ள விபரக்கூற்றுகளின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதால் விலைகுறைந்த மின் குமிழ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | டயர், டியூப் கொள்வனவு செய்யும்போது தொழில்நுட்ப மதிபீட்டுக்குழுவினால் குறைந்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளாமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை முன்வைக்காமையினால் சபைக்கு ரூ.81,157 நட்டம் ஏற்பட்டிருந்து | ஏதேனும் பொருளொன்றை தெரிவுசெய்யும்போது தெரிவுசெய்வதற்கு ஏதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணிகளை தொழில்நுட்பக்குழு தீர்மானத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். | குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யாமைக்கு நிறுவனத்தின் அமைவிடம், தூரம், டயர்களின் தரம் மற்றும் பாவனைக்காலம் போன்ற விடயங்கள் காரணமாக அமைந்தன. |

**3.8 பெறுகை**

**3.8.1 வழங்கல் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1 (ஈ) இன் பிரகாரம் ஆரம்ப பெறுமதியில் 50 வீதம் வரை மீள கொள்வனவு செய்ய இயலுமாக இருப்பினும் அதற்கு மாற்றமாக விதத்தில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கலஞ்சிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அப்பொருட்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியத்தருகிறேன். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1 (அ) பிரிவின் பிரகாரம் ரூ.950,400 பெறுமதியான கொள்வனவுகளுக்கு விலைமனு சமர்ப்பிக்கப்பட்டதற்கான சான்றுகள் காணப்படாததுடன், விலை மனுக்களை திறந்த திகதியில் சபையின் தின முத்திரை விலைமனுக்களில் இடப்பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இங்கு சிற்சில காரணங்களுக்காக சபையின் தின முத்திரை இடுவது போன்ற விடயங்கள் தவறுதலாக விடப்பட்டுள்ளது தெரிவதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் செயற்படுவதற் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன். |

**04 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 5 (7) ஆம் விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று செயற்படுத்தப்பட்டாலும் நிதிப் பிரமாணம் 134 (3) இற்கு அமைய உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளக கணக்காய்வு அதிகாரிக்கு அக்கடமைகளுக்கு மேலதிகமாக வேறு கடமைகளும் பொறுப்புச்சாட்டிருப்பதால் உள்ளக கணக்காய்வு தொடர்பான சுருக்கமான அறிக்கையொன்று தயாரித்து வருவதாகவும், முழுமையான அறிக்கையொன்று தயார் செய்யாமையினால் கணக்காய்வுக்கு அதன் பிரதிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கிறேன். |